**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை**
**முன்னிலை – திருமதி.S.ஆனந்தவல்லி, B.A., B.L.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, அருப்புக்கோட்டை
2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ம் நாள் திங்கள்கிழமை.
இடைநிலை மனு எண்.4/2025
உள்
அசல் வழக்கு எண்.18/2021
––––

ராதாகிருஷ்ணன் .... மனுதாரர்/வாதி

/எதிரிடை/

சின்னச்சாமி ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது கடந்த 14.10.2025 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இன்று 24.11.2025 ம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதிவிசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.N.சோலைராஜ் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் V.குருசாமி அவர்கள் முன்னிலையாகியும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் வழங்கிடும் .....

**உத்தரவு**

அசல் வழக்கில் கூடுதல் ஆவணங்களை தாக்கல் செய்து குறியீடு செய்யதோதாக வா.சா.1 ஐ Recall செய்ய உத்தரவிட அனுமதி கோரி மனு தாக்கல் உ.வி.மு.ச.பிரிவு ஆர்டர் 18 ரூல் 17 மற்றும் 151 –ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்/வாதி தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்**:–

தாவா சொத்தை பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு என் தரப்பு கூடுதல் சாட்சிக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் தாவா சொத்தினுடைய 1957 ம் வருடத்திய என்

ANANTHAVALLI S
Digitally signed by ANANTHAVALLI S

தகப்பனார் பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ரிஜிஸ்டர் மற்றும் நில உடைமைக் குறிப்பேடு காலத்தில் என் தகப்பனார் பெயரில் வழங்கப்பட்ட பட்டா எண்.378 ஆகியவற்றை தாக்கல் செய்து என் தரப்பில் நிரூபிக்க வேண்டியிருக்கிறது. மேற்படி நில உடைமைக் குறிப்பேடு காலத்தில் வழங்கப்பட்ட பட்டா என் வீட்டில் உள்ள பல ஆவணங்களுடன் கலந்து இருந்தது. என் வழக்கறிஞர் கூறியதின் பேரில் மிகுந்த சிரமம் மேற்கொண்டு தேடி எடுத்துள்ளேன். அதுபோல் தாவா சொத்திற்குரிய செட்டில்மெண்ட் ரிஜிஸ்டர் நகல் கோரி விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலத்தில் 6 மாதம் முன்பு விண்ணப்பம் செய்ததில் தற்போதுதான் என் கைவசம் கிடைத்தது. எனவே மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்ய தோதாக இவ்வழக்கில் PW1–ஆன என்னை ரீ– கால் செய்து உத்தரவிட வேண்டியது அவசியமாய் இருக்கிறது. இல்லையேல் எனக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடியதாய் இருக்கிறது. மனு அனுமதிக்கப்படவேண்டியது.

3. <u>எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த மறுப்புரை சுருக்கம்</u>:–

அசல் வழக்கில் இந்த மனுதாரரை எனது தரப்பில் கடந்த 22.07.2025 ம் தேதியே குறுக்குவிசாரணை செய்யப்பட்டு மனுதார் தரப்பில் கூடுதல் சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்ட நிலையில் பல வாய்தாக்கள் கடந்த பின்பு மனுதார் தற்போது இந்த மனுவை தாக்கல் செய்திருப்பது மேற்படி அசல் வழக்கின் விசாரணையை வீண் காலங்கடத்தும் கெட்ட எண்ணம் கொண்டது ஆகும். இந்நிலையில் கோர்ட்டார் அவர்கள் மனுதாரின் மனுவை என்னுடைய Exemplary cost–வுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டியது அல்லாத பட்சத்தில் எனக்கு அளவிட முடியாத கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுவிடும். ஆகவே மனுதாரின் மனுவை என்னுடைய Exemplary Cost–வுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டியது அவசியமும், நியாயமுமாக உள்ளது.

4. <u>தீர்வு காணவேண்டிய பிரச்சினை</u> :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா?, இல்லையா? என்பதுதான் தீர்மானிக்கப்பட வேண்டியது ஆகும்.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S

**<u>தீர்வு:–</u>**

(5) மனுதாரரின் மனு மற்றும் எதிர்மனுதாரரின் மறுப்புரை பரிசீலிக்கப்பட்டது.

(6) இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியம் அளிக்கப்படவில்லை. ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

(7) தாவாச்சொத்தைப்பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/வாதி தரப்பு கூடுதல் சாட்சிக்காக வழக்கு நிலுவையில் உள்ளபோது வா.சா.1 ஐ மீண்டும் விசாரிக்க கேட்டு இம்மனு மீண்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவில் காரணமாக மனுதாரர்/வாதி தரப்பில் கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்ய வேண்டியிருப்பதாலும் மேற்படி ஆவணங்கள் தற்போது தான் கிடைக்கப்பெற்றது என்பதாலும் அந்த ஆவணங்களை தாக்கல் செய்வதற்கு வா.சா.1 ஐ மீண்டும் அழைக்கக்கேட்டு மனுதாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்படாவிட்டால் கஷ்ட நஷ்டம் ஏற்படும் என்று வாதிடப்பட்டது.

(8) எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில் வா.சா.1 குறுக்குவிசாரணை செய்யப்பட்டு கூடுதல் சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்ட நிலையில் பல வாய்தாக்கள் கடந்து இம்மனுவை தாக்கல் செய்திருப்பது வழக்கின் விசாரணையை காலங்கடத்தும் கெட்ட எண்ணத்துடன் தாக்கல் செய்திருப்பதால் எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என வாதிடப்பட்டது. ஆவணங்களை பரிசீலிக்கையில், வா.சா.1 குறுக்குவிசாணை செய்யப்பட்ட கூடுதல் சாட்சியத்திற்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டு 3 வது வாய்தாவில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/வாதி தன்னுடைய வழக்கை போதுமான ஆவணங்கள் தாக்கல் செய்து நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். அந்த வகையில் மனுவில் சொல்லியுள்ள காரணங்கள் ஏற்கும் விதமாக உள்ளது. தரப்பினர்கள் தங்கள்

ANANTHAVALLI S
Digitally signed by ANANTHAVALLI S

வழக்கை நிரூபிக்க கீழமை நீதிமன்றங்கள் அவர்களுக்கு ஒரு வாய்ப்பை அளிக்கவேண்டும் என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. மீண்டும் வா.சா.1 ஐ அழைத்து ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டும் என்ற இம்மனுவை அனுமதிப்பது நீதியின்பால் உகந்தது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

மேற்படி உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய இன்று 2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ம் நாள் பகரப்பட்டது.

ANANTHAVALLI S
Digitally signed by ANANTHAVALLI S

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
அருப்புக்கோட்டை

<u>மனுதாரர்/வாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் </u>:– இல்லை.

<u>எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் </u>:– இல்லை.

ANANTHAVALLI S
Digitally signed by ANANTHAVALLI S

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
அருப்புக்கோட்டை

----------------------------------------
மு.மா.உ.நீ. அருப்புக்கோட்டை,
இடைநிலை மனு எண். 4/2025
உள்
அசல் வழக்கு எண். 18/2021
சீரான/வரைவு உத்தரவு
நாள் 24.11.2025
––––––––––––––––––––––––